V9SS

விருதுநகர் மாவட்டம்

மூன்றாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2025

-----

வகுப்பு 9

காலம்: 1.30 மணி | சமூக அறிவியல் | மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: 5×1=5**

1) சிலேட்டரை அமெரிக்கத் தொழில் புரட்சியின் தந்தை என அழைத்தவர் யார்?
அ) எப்.டி. ரூஸ்வெல்ட் ஆ) ஆண்ட்ரு ஜேக்சன்
இ) வின்ஸ்டன் சர்ச்சில் ஈ) உட்ரோ வில்சன்

2) ஒப்பந்தக்கூலி முறையானது ஒரு வகை ............
அ) ஒப்பந்தத் தொழிலாளர் முறை ஆ) அடிமைத்தனம்
இ) கடனுக்கான அடிமை ஒப்பந்தம் ஈ) கொத்தடிமை

3) 'விழு! மூடிக்கொள்! பிடித்துக்கொள்!' என்பது எதற்கான ஒத்திகை?
அ) தீ ஆ) நிலநடுக்கம் இ) சுனாமி ஈ) கலவரம்

4) ............ வெளிகுடியேற்றப் பதிவில் முன்னிலை வகிக்கும் மாவட்டம்.
அ) இராமநாதபுரம் ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) வேலூர்

5) 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மக்கள் தொகை
அ) 121 கோடி ஆ) 221 கோடி இ) 102 கோடி ஈ) 100 கோடி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக: 5×1=5**

6) விஞ்ஞான சோசலிசத்தை முன்வைத்தவர் ............ ஆவார்.
7) ஆங்கிலேயரின் முக்கிய வருவாயாக திகழ்ந்தது ............ ஆகும்.
8) தீ விபத்து ஏற்படும் போது நீங்கள் அழைக்கும் எண் ............
9) மக்களின் நகர்வு நகர்ப்புறங்களைவிட கிராமப்புறங்களில் ............ காணப்படுகின்றன.
10) பெண்கள் அதிக அளவில் இடம்பெயர்வதற்கான காரணம் ............

**III. கீழ்க்காணும் கேள்விக்குச் சுருக்கமாக விடையளி: 10×2=20**
**(ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி)**

11) ஹே மார்க்கெட் படுகொலை பற்றிக் குறிப்பு வரைக.
12) தொழிற்புரட்சியின் இரு முக்கிய விளைவுகளைக் கோடிட்டு காட்டுக.
13) காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம் – இரண்டையும் வேறுபடுத்திக் காட்டவும்.
14) இந்திய பொருளாதாரம் காலனிமயமாக்கப்பட்டதின் மூன்று கட்டங்களைக் கூறுக.
15) பேரிடர் முதன்மை மீட்புக்குழு என்பவர் யாவர்?
16) சுனாமிக்கு பிறகு என்ன செய்ய வேண்டும்?
17) சாலை விபத்துக்கானக் காரணிகளை குறிப்பிடுக.
18) சாலை சமிக்ஞையில் (Road Signal) எந்த நிறம் 'நில்' என்பதை உணர்த்துகிறது?
19) மிகக் குறைவான எண்ணிக்கையில் வெளி இடப்பெயர்வைக் கொண்ட தமிழ்நாட்டிலிலுள்ள நான்கு மாவட்டங்களின் பெயர்களைக் கூறுக.
20) ஏழை மக்கள் மற்றும் வசதி வாய்ப்புடைய மக்கள் இடம்பெயர்வதற்கான காரணங்கள் யாவை?
21) லூயி ரெனால்ட் பற்றி நீங்கள் அறிந்தது என்ன?
22) இங்கிலாந்தில் தொழிலாளர்களின் வாழ்விடங்களின் நிலை எவ்வாறு இருந்தன?

**IV. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விரிவாக விடையளி: 4×5=20**

23) இங்கிலாந்தின் தொழிற்புரட்சியினால் இந்தியாவில் ஏற்பட்ட விளைவுகள் யாவை?
24) தீ விபத்தின் போது என்ன செய்ய வேண்டும் என்பதை பற்றி குறிப்பு வரைக.
25) சாலை பாதுகாப்பு விதிகளைப் பற்றி விவரி.
26) சாலை விபத்தைத் தடுக்கும் முறைகளைக் குறிப்பிடுக.
27) நிலநடுக்கத்தின்போது கட்டடத்திற்குள் இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?
28) இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் பொருளாதாரத் தாக்கத்தை விவாதிக்கவும்.

----------

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com